Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:

ANSWER ALL THE QUESTIONS

1. பேரியல் பொருளாதாரம் என்பது ஒட்டு மொத்தங்களாகிய நாட்டு வருமானம், வேலைவாய்ப்பு நாட்டு உற்பத்தி முதலானவற்றை உள்ளடக்கியது. பேரியல் பொருளாதாரத்தை 'வருவாய்க் கோட்பாடு" எனவும் அழைப்பர்.
2. பணவீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிப்பதாகும்.
3. பொருளாதாரம் என்கிற கருத்தினை ஏ.ஜே. பிரவுண் என்பவர் "மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையை குறிப்பது என்று வரையறுத்துள்ளார்
   (அல்லது)
   "நுகர்வோரின் விருப்பங்களை நிறைவு செய்வதற்கான பொருள்களையும், பணிகளையும் தயாரிக்கும் உற்பத்தியாளர், பணியாளர்களுக்கிடையே உள்ள கூட்டுறவே. பொருளாதார அமைப்பு" என ஜே.ஆர். ஹிக்ஸ் (J.R. Hicks) கூறுகிறார்.
4. வளர்ச்சி நிலை 4 வகையாக பிரிக்கப்பட்டுள்ளது.
   1. வளர்ந்த பொருளாதாரம்
   2. வளர்ச்சி குன்றிய பொருளாதாரம்
   3. வளராத பொருளாதாரம்
   4. வளரும் பொருளாதாரம்
5. 1. முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தந்தை ஆடம் ஸ்மித் ஆவார்.
   2. முதலாளித்துவப் பொருளாதாரம் தடையில்லாப் பொருளாதாரம் மற்றும் அங்காடிப் பொருளாதாரம் எனவும் அழைக்கப்படுகிறது.
   3. இங்கு பொருளாதார நடவடிக்கைகளை தீர்மானிப்பதில் அரசாங்கத்தின் பங்கு குறைவாகவும், சந்தையின் பங்கு அதிகமாகவும் இருக்கும்.
   4. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் தனியார் வசம் இருக்கும். பண்டங்கள், பணிகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இலாப நோக்கத்தை முதன்மையாகக் கொண்டிருக்கும்.
6. 1. மாதிரி என்பது உண்மை சூழலை எளிமையாக பிரதிபலிப்பது ஆகும்.
   2. பொருளாதார வல்லுநர்கள், பொருளாதார நடவடிக்கைகள், அவற்றுக்கிடையேயான உறவுகள், நடத்தைகள் பற்றி விவரிப்பதற்கு மாதிரிகளைப் பயன்படுத்துகின்றனர்.
   3. மாதிரி என்பது பொருளாதாரம் எவ்வாறு இயங்குகிறது என்பதை விளக்குகிறது.
7. 1. ஒரு பொருளாதாரத்தின் வருமான சுழல் ஓட்ட மாதிரியானது, அந்தப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குவதாகும்.
   2. இது பொருளாதார முகவர்களாகிய நிறுவனம், குடியிருப்பு, அரசாங்கம் மற்றும் நாடுகளிடையே வருமானம், பண்டங்கள், பணிகள், உற்பத்திக் காரணிகளின் ஓட்டத்தை காண்பிப்பதாகும்.
8. (i) உலகத்துவம் என்ற புதிய அங்காடி தத்துவம் என்பது பன்னாட்டு வாணிபத்தால் நாடுகளை இணைப்பதன் மூலம் உலக முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாகும்.
   (ii) இந்தத் தத்துவம், விரிவுபடுத்தப்பட்ட முதலாளித்துவம் என்றும் குறிப்பிடப்படுகின்றது.
9. (i) முதலாளித்துவம், சமத்துவம் ஆகிய இரண்டின் இயல்புகளை உள்ளடக்கியது.
   (ii) தனியார் மற்றும் பொதுத்துறைகள் இணைந்து பொருளாதார மேம்பாட்டிற்காக பணியாற்றும் முறை.
10. மொத்த பொருளாதார காரணிகளை அடிப்படையாக கொண்டு ஒரு நாட்டின் வாணிப சுழற்சி மாற்றங்களை (செழிப்பு, பின்னிறக்கம், மந்த நிலை, மீட்பு) தெரிந்துகொள்ளலாம்.

QB365 Study Material QUESTION BANK 365